புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

================================================================================

சங்க அகப் பாடல்களின் வழி தமிழர்ப் பண்பாடு

முனைவர். ரா. ராஜேஸ்வரி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி,
சென்னை – 600 034.

================================================================================

ஆய்வுச் சுருக்கம்:

வையகம் போற்றும் மொழி வளத்தையும் பண்பாட்டுச் செழுமையையும் கொண்டது தமிழ்மொழி. கற்காலம் முதல் தற்காலம் வரை தமிழுக்கு என்றுமே பொற்காலமே. காலந்தோறும் இம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் தமிழின் பெருமையையும் தமிழரின் அருமையையும் மிகத் தெளிவாய் உணர்த்துகின்றன. குறிப்பாக, சங்க இலக்கியங்கள் தமிழரின் பண்பாட்டைத் தெள்ளத் தெளிவாகக் காட்டும் பெட்டமாக அமைகின்றன. இக்கருத்துடன், சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கும் பண்பாடுசார் கூறுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை:

தமிழர்தம் வாழ்வியல் முறை வேந்தர்களின் ஆட்சி முறை, மன்னர் மற்றும் புலவர்களுக்கிடையிலான உறவு முறை, தலைவன் தலைவிக்கிடையிலான உறவு நிலை, தலைவி, தோழி இருவர்தம் நட்பு, தலைவன் பாங்கனுக்கு இடையிலான நட்புறவு முதலான பல நிலைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் அக்காலச் சூழலைச் சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவற்றில் குறிப்பாக எட்டுத்தொகையில் இடம்பெறும் அகப்பாடல்களின் வழி வெளிப்படும் தமிழர்தம் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

நற்றிணை:

அகத்திணைக் கருத்துரைக்கும் மற்றொரு சங்க நூல் நற்றிணை. தமிழர்தம் பண்பாட்டினை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கும் நூலாக இது விளங்குகின்றது.

கடற்கரையில் தேர்ச்சக்கரங்களில் நண்டுகள் சிக்கிக் கொள்ளாதவாறு தேரை ஓட்டிய பாகனின் பண்பின்வழி, தமிழர்தம் பண்பாட்டினை ஒரு செய்யுள் விளக்குகின்றது.

”ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர
நிலவு விரிந்தன்றால் கானலானே” (பா.11)

மெய்யான செல்வம் குறித்து ஓர் செய்யுள் உரைக்கின்றது.

”சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே” (பா.210)

தம்மை அடைந்தவர்களுடைய துன்பத்தினை நீக்கும் பண்புடையவரே சிறந்த செல்வமுடையவராக இந்நற்றிணைச் செய்யுள் உணர்த்துகின்றது.

விருந்தோம்பல் என்பது தமிழர்ப் பண்பாட்டில் தலையாய இடம்பெறுகின்றது. நற்றிணையிலும் விருந்தோம்பல் சார்ந்த கருத்துகளைக் காணவியல்கின்றது.

”நன்மனை நனிவிருந்து அயரும்

*கைதூவின்மையின் எய்தாம் ஆறே'' (பா.280)*

*தலைவியின் ஊடல் தீர, தலைவன் விருந்தினரைத் தேடும் நிலையினைக் காணவியல்கின்றது.*

*''எமக்கே வருகதில் விருந்தே; சிவப்பு ஆன்று*
*சிறிய முள் எயிறு தோன்ற*
*முறுவல் கொண்ட முகம் காண்கம்மே'' (பா.120)*

*நட்டோர் கொடுப்பதாக இருந்தால் பண்பாடு மிக்கோர் நஞ்சையும் உண்பர் என்பதை இந்நூல்,*

*''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்*
*நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' (பா.355)*

*என்கின்றது.*

*நற்றிணைத் தலைவியின் இயல்பு பண்பாடு மிக்க தமிழ்ப் பெண்ணின் திறத்தினை மிக அழகாகப் படம்பிடிக்கின்றது.*

*''கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்*
*கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்'' (பா.11)*

*தலைவனின் வறுமை நிலையினைப் பெருமையுடன் ஏற்கும் தலைவியின் வழி பண்பாடு மிக்க சமூகத்தினை இவ்விலக்கியம் கண்முன் நிறுத்துகின்றது.*

*ஒரு தலைவன் எண்ணற்ற இடையூறுகள் நேர்ந்தாலும் தன்னுடைய தலைவி தன் உள்ளத்திலேயே இருப்பாள் என்பதை,*

*''மாயா இயற்கைப் பாவையின்*
*போதல் ஒல்லாள் என் நெஞ்சத் தாளே'' (பா.201)*

*எனும் செய்யுள் உணர்த்துகின்றது.*

*குறுந்தொகை:*

*நான்கடி முதல் எட்டடி வரையிலமைந்த சங்கப் பாடல்களின் தொகுப்பு குறுந்தொகை. ஐந்திணை சார்ந்த பாடல்களும் விரவிக்கிடக்கும். இந்நூலில் தமிழர்ப் பண்பாடு சார்ந்த செய்திகளும் காணக்கிடைக்கின்றன. இவ்வாழ்வின் சிறப்பினைப் பற்றி இந்நூல்,*

*"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்*
*இனியவும் உளவோ'' (பா.322)*

*என்கிறது. "இல்லற வாழ்வைத் திறம்பட வாழ்தலைக் காட்டிலும் இனியது வேறொன்றுமில்லை" என்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன. மற்றொரு செய்யுளில்,*

*''வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்*
*மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'' (பா.135)*

*என்பதன் மூலம் அகவாழ்வில் தமிழர் பேணிய பண்பாடு உணர்த்தப்படுகின்றது.*

*தம்மிடம் உள்ள செல்வத்தை அழித்துக் கொண்டிருப்போர் செல்வம் உடையவராகக் கருதப்படமாட்டார். இல்லாமை உடையோரின் வாழ்வு இரத்தலைக் காட்டிலும் இழிவானது என்பதையுணர்ந்த தலைவன் பொருள்தேடச் சென்றிருப்பதாகத் தலைவி கூறுவதாக அமைகின்றது.*

*''உள்ளது சிதைப்போர் உளர்எனப் படஅர்*
*இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு, எனச்*
*சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்*
*சென்றனர். '' (பா.283)*

*என்ற அடிகள் தமிழர்தம் பண்பாட்டுணர்வினைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.*

*தலைவன் தலைவியின் அன்பின்வழித் தமிழர்தம் பண்பாட்டினைக் குறுந்தொகை உணர்த்துகின்றமையை,*

*''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும்ஆர் அளவின்றே'' (பா.3)*

*என்ற அடிகள் உணர்த்துகின்றன.*

*ஐங்குறுநூறு:*

*ஐங்குறுநூறு எனும் ஒப்பற்ற நூல் ஐந்திணைகள் குறித்த நூறு நூறு பாடல்கள் அமையப்பெற்றது. இந்நூலில் ஒரு தலைவி,*

*“பசியில் லாகுக பிணிசேண் நீங்குக” (பா.5)*

*என விரும்புவதாகத் தோழிக் கூறுகிறாள். மக்கள் பசியற்றும் பிணியின்றியும் வாழ்வதைத் தலைவி விரும்புவதிலிருந்து அக்காலத் தலைவியின் பொதுநலப் பண்பினையுணர முடிகின்றது.*

*ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வசையின்றி வாழ்தல் இன்றியமையாததாகின்றது. நற்றாய் எனப்படும் அன்னை,*

*”வேந்துபகை தணிக! யாண்டு பலநந்துக” (பா.6)*

*என்கிறார். மேலும்,*

*”அறம் நனி சிறக்க! அல்லது கெடுக” (பா.7)*

*என்று நாட்டில் நீதி மேலும் சிறந்து அல்லவை அழிய வேண்டும் என்று நற்றாய் கூறுவதாக அமையும் இவ்வடிகள், அக்கால மக்கள் பொதுநலம் பேணுவதில் சிறந்தோராய்த் திகழ்ந்தமையைக் காட்டுகின்றன.*

*மற்றொரு செய்யுளில், புலியிடமிருந்து தப்பிப் பிழைத்த ஆண்மான, தன் பிணையினை அழைக்கும் பாலை நிலத்தில், தலைவன் தலைவியை அழைத்துச் செல்கின்றான். அந்நிலையில் வருந்தும் தாய், தன்னைப் போல் தலைவனின் தாயும் வருந்துவாளே எனத் துன்புறுவாள் என எண்ணுகிறாள். இதனை,*

*”நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக!*
*புலிக்கோள் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை,*
*மான்பிணை அணைதர, ஆண்குரல் விளிக்கும்,*
*வெம்சுரம் என்மகள் உய்த்த*
*வம்பு அமை வல்வில் விடலை தாயே” (பா.373)*

*எனும் அடிகளால் அறியலாம். தலைவனுடன் உடன் போக்குச் சென்ற தலைவியையும் தலைவனையும் கடிவதையோ அவர்தம் செல்லும் வழியில் நேரும் துன்பங்களையோ பற்றியுரைக்கவில்லை. தலைவனின் தாய் இவ்வேளையில் வருந்துவாளே என்று தலைவியின் தாய் வருந்துவதாக அமைவது அக்கால மக்களின் பண்பினை வெளிப்படுத்துகின்றது.*

*தலைவன், தலைவியிடம் கொண்ட அன்பை வெளிப்படுத்துமோர் ஐங்குறுநூற்று பாடலில்,*

*”அரும்பொருள் வேட்கையம் ஆகி, நின்துறந்து*
*பெரும்கல் அதரிடைப் பிரிந்த காலைத்*
*தவநனி நெடிய வாயின; இனியே*
*அணியிழை உள்ளி யாம் வருதலின்*
*அணிய வாயின சுரத்திடை ஆறே” (பா.359)*

*எனும் அடிகளின் வழி, தலைவனின் பண்பினை அறியலாம். தலைவியின் நினைவு வந்ததால் தலைவன் திரும்பி வந்த பாதையின் தொலைவு அண்மையவாய் மாறியதைத் தலைவன் இவண் வெளிப்படுத்துகின்றான். எனவே, அக்காலத் தலைவனின் பண்பாடு இவண் அறியப்படுகின்றது.*

*கலித்தொகை:*

*கலிப்பாக்களாலான அகப்பொருள் நூல் கலித்தொகை. அரிய பல கருத்துகளைக் கோர்வையாக்கித் திகழும் இந்நூலில் பண்பாடு சார்ந்த கருத்துகளைக் காணவியல்கின்றது.*

*”ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*
*பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை” (பா.133)*

*எனும் செய்யுள் வழி தமிழர்தம் பண்பாட்டுணர்வினைக் கலித்தொகை தெற்றெனக் காட்டுகின்றது.*

*அகநானூறு:*

*அகம் சார்ந்த நூலாயினும் பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளைத் தன்னகத்தே கொண்டதொரு சிறந்த நூலாக அகநானூறு திகழ்கின்றது.*

*வறுமையுற்று இல்லை என்று இரப்போர்க்கு “இல்லை“ என்று பதில் அளிக்காமல் தன்னால் இயன்ற உதவியைச் செய்தலே சிறப்பானது என்பதை,*

*"இல்லோர்க்கு இல்என்று இயைவது கரத்தல்*
*வல்லா நெஞ்சம்" (பா.53)*

*என்ற அடிகள் உணர்த்துகின்றன.*

*பொருள் தேடித் தன்னைப் பிரிந்த தலைவன் நோயின்றி வாழ்தல் வேண்டும் எனக் கூறும் தலைவி, தன்னெழில் சிதையினும் தலைவன் நலனையே விரும்புகிறாள்.*

*"ஆய்நலம் தொலையினும் தொலைக என்றும்*
*நோயிலராக நம் காதலர்" (பா.115)*

*என்னும் அடிகளால், தன்னலம் பேணாத தகையராய்ப் பெண்டிர் விளங்குகின்றமையை அறியவியல்கின்றது.*

*நிறைவுரை:*

*மரபையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பேணுவதில் தமிழர்கள் என்றும் தன்னிகரற்றோர். அவ்வகையில் பண்பாட்டைப் பறைசாற்றுவதில் சங்ககால எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள அகநூல்களின் பங்கினை ஆய்வதாக இக்கட்டுரை அமையப் பெற்றது. இவ்விலக்கியங்கள் அக்காலச் சூழலை உணர்த்துவதோடு மட்டுமின்றி தமிழர்ப் பண்பாட்டையும் செம்மையாகப் படம்பிடிப்பதை இதன்வழி அறியவியல்கின்றது.*

*துணைநூற்பட்டியல்:*


1. *சாமி சிதம்பரனார், எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும், மூன்றாம் பதிப்பு, டிசம்பர். 1986, ஐந்திணை பதிப்பகம், சென்னை- 40*
2. *தட்சிணாமூர்த்தி.அ.முனைவர். (உரை), ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*
3. *நாகராசன்.வி.முனைவர்.,(உரை), குறுந்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*
4. *பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), நற்றிணை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*
5. *பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), கலித்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*
6. *ஜெயபால்.இரா.முனைவர்., (உரை), அகநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********